

පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 290

උපරිමාධිකරණ විනිශ්චයකාරවරු

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 290

உயர்நீதிமன்ற நீதியரசர்கள்

Parliamentary Series No :290
Judges of the Superior Court

පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 290

ආයතනයේ නම : උපරිමාධිකරණ විනිශ්චයකාරවරු

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

පාරාළුමන්ර වෙළියීට්ටුත් තොටර් ඉලක්කම්: 290

නිරුවනත්තින් පෙයර්: උයර්නීතිමන්ර නීතියරසර්කළ්

පාරාළුමන්රත්තින් අරස කණක්කුක් කුළුවිනාල් මුන්වෙක්කප්පට්ට අරික්කෙ තොටර්පාක නිලෙයියර් කට්ටළෙ ඉලක්කම් 119(4)ඉන් කීළ් නිරුවනඞ්කළිර්කුප් පොරුප්පාන කෙළරව අමෙච්චරින් අවතානිප්පුක්කළුම් මර්රුම් අතු තොටර්පාක එටුක්කප්පටුම් නටවටික්කෙකළුම් පාරාළුමන්රත්තිර්කු සමර්ප්පිත්තල්.

Parliamentary Series No : 290

Name of the Institution : Judges of the Superior Courts

Submission of observations of the Hon.Minister in Charge of the Institutions and steps taken With regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No . 119(4)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல . 290

நிறுவனத்தின் பெயர் - உயர் நீதிமன்ற நீதியரசர்கள்

நிதியாண்டு – 2021

	குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	பலவீனங்களை தவிர்ப்பதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலைமை
01	பொருட்பட்டியல் இற்றைப்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்படவில்லை.	2024 ஆம் ஆண்டாகும் போது பொருட்பட்டியலை இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
02	2004.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் பிரமாணங்களின் படி மென்முறைமையுடன் தொடர்புடைய முத்லாம், இரண்டாம் மற்றும் மூன்றும் கடவுச்சொற்கள் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு முறை மாற்றப்படவில்லை.	தற்போது 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைவாக கடவுச்சொற்களை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
03.	அனைத்து வாகனங்களின் உடமையை உறுதிப்படுத்தம் ஆவணங்கள் உடைமையில் இல்லை.	தற்போது நீதி அமைச்சின் உடைமையில் இருக்கும் உடமையை உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
04	வாகன ஓட்டக் குறிப்புப் பதிவேடுகள் நிர்வகிக்கப்பட்டு ஒவ்வொரு வாகனம் தொடர்பான ஓட்டக்குறிப்புகள் இற்றைப்படுத்தப்படவில்லை.	தற்போது இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.
05	வாகன விபத்துக்கள் தொடர்பாக நி.பி 103, 104, 109 மற்றும் 110 ஆம் பிரமாணங்களின் படி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	வாகன விபத்துக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
06	விஷேட செலவுப் பிரிவிற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருட் பாவனையானது 2016.12.29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபத்தின் 3.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீள் பரிசீலனை செய்யப்படவில்லை.	ஒதுக்க வாகனங்கள் இல்லை. கௌரவ நீதிபதிகளுக்கு மாத்திரமே எரிபொருள் உதவிப்படி வழங்கப்படுகின்றது.
07	நி.பி 371 க்கு அமைவாக வழங்கப்பட்ட தேவை நிமித்த உப பணி முற்பணம் ஒரு மாத காலத்தினுள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	2023 இலிருந்து தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
08	சகல ஆளணி உத்தியோகத்தர்களுக்கும் அவர்களின் பொறுப்புக்கள் எழுத்துமூலம் சாட்டப்படவில்லை.	பொருந்தாது.
09	04/2017 ஆம் இலக்க 2017.09.20 ஆம் திகதியுடைய முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபத்திற்கு அமைவாக ஒவ்வொரு காலாண்டும் நிறைவடைந்து ஒரு மாத காலத்தினுள் பணியாட் தொகுதி தொடர்பான	பொருந்தாது.

	விபரங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	
10	2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 (4) ஆம் உபபிரிவின் நியதிகளுக்கு அமைவாக 2018.08.01 செல்லுபடியாகும் விதத்தில் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் அனைத்து பிரதிகளும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இல்லை.
11	நி.பி 134 (2) இன் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் ஆலோசனையின் பின்னர் வருடத்தின் ஆரம்பத்தில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்படவில்லை.	நிறுவனத்தில் உள்ளகக் கணக்காய்வுக் கிளை இல்லாததால் இது பொருந்தாது.

பதிவாளர் - உயர்நீதிமன்றம்

2024.02.05 ஆம் திகதி

உயர் நீதிமன்றத்தில்

Aravinda Gunaratne
Additional Magistrate
Registrar
Supreme Court
Colombo - 12
Sri Lanka

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல : 290

நிறுவனத்தின் பெயர் - உயர் நீதிமன்ற நீதியரசர்கள்

நிதியாண்டு – 2021

	குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	பலவீனங்களை தவிர்ப்பதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலைமை
01	நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற இணையத்தளத்தில் பொதுமக்களுக்கு தமது முறைப்பாடுகளை தாக்கலிடவும் தருத்துக்களைத் தெரிவிக்கவும் வாய்ப்பு வழங்கப்படவில்லை.	பொது மக்களின் தொடர்பாடல் நோக்கங்களுக்காக உயர்நீதிமன்றத்தின் இணையத்தளத்தில் பதிவாளர் மற்றும் பிரதிப் பதிவாளரின் தொடர்பிலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரிகள் வழங்கப்பட்டுள்ளன. உயர்நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் வழக்குகளுடன் தொடர்புடைய விவகாரங்களைக் கையாளுவதாலும் இணையத்தளத்திற்குப் பிரவேசிக்கும் அனைவரும் வாசிக்கக்கூடியவாறு தவறானதும் நீதிமன்றத்தை அவமதிக்கக்கூடியதுமான கருத்துக்கள் நீதிமன்றத்தின் கௌரவத்திற்கும் அதன் சீரான தொழிற்பாட்டிற்கும் பங்கமேற்படுத்தலாம் என்பதாலும் இணையத்தளத்தில் பொதுமக்களின் கருத்துக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.
02	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வுக் கருத்து மறுப்பு அபிப்பிராயமாகவோ அல்லது சாதகமற்ற கருத்தாகவோ உள்ளது.	2023 ஆம் ஆண்டில், இக்குறைபாடுகளை இயலுமானவரை குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
03.	02/2018 ஆம் இலக்க 2018.01.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட மனித வள திட்ட வரைபு இருக்கவில்லை.	கௌரவ பிரதம நீதியரசர் உள்ளடங்கலாக உயர் நீதிமன்ற நீதியரசர்கள் இலங்கை சனநாயக சோசலிஸக் குடியரசின் மேதகு சனாதிபதியினால் நியமனம் செய்யப்படுவதால் உயர் நீதிமன்ற பதிவாளருக்கு அது தொடர்பாக செயற்பட முடியாது.
04	தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டத்தின் மூலம் நிறுவனத்தின் ஆளணியின் 50 சதவீதத்திற்கு மேற்பட்டோருக்கு 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வாய்ப்புக்கள் உறுதிப்படுத்தப்படவில்லை.	கௌரவ பிரதம நீதியரசரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நாளாந்த நீதிமன்ற நடடிவடிக்கைகளுக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. எதிர்காலத்திலும் இத்தகைய பயிற்சி வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
05	சகல பணியாட் தொகுதியினரையும் உள்ளடக்கி செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு உடன்டிக்கை செய்திருக்காமை.	பொருந்தாது.
06	மனித வள அபிவிருத்தி திட்டத்தைத் தயாரிக்கவும் இயற்றிறன் மற்றும் ஆற்றல் விருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் நிறுவனத்தில் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்காமை.	கௌவர பிரதம நீத்யரசரின் அறிவுறுத்தல்களுடன் இணங்கும் விதத்தில் நாளாந்த நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு இவ்வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.
07	நிறுவனத்தின் பரப்பெல்லைக்கு செல்லுபடியாகும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காணாமை.	உயர் நீதிமன்றப் பதிவாளர் திணைக்களத்திற்குரிய நிலைபேறான இலக்குகள் மற்றும் செயலாற்றுகைச் சுட்டிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், கௌரவ உயர் நீதிமன்ற நீதியரசர்களின் பரப்பெல்லைக்குள் நிலைபேறான இலக்குகளுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்திற்கேற்ப எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

08	இனங்கண்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை எய்துவதை அளவிடுவதற்கான செயலாற்றுகை இலக்குகள் தீர்மானிக்கப்படாமை.	உயர் நீதிமன்றப் பதிவாளர் திணைக்களத்திற்குரிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் அடைவுமட்டத்தை அளவிடுவதற்கான செயலாற்றுகை இலக்குகள் இனங்காணப்பட்டாலும் கௌரவ பிரதம நீதியரசர் உள்ளடங்கலாக உயர் நீதிமன்ற நீதியரசர்கள் தொடர்பில் அவற்றை நடைமுறைப்படுத்துவது நடைமுறைச் சாத்தியமனதல்ல.
09	இனங்கண்ட நிலைபேறான இலக்குகளை அமுல்படுத்துவதுடன் தொடர்புடைய முன்னேற்றத்தினை அளவிடுவதற்கான குறிகாட்டிகளைத் தீர்மானிக்காமை.	உயர் நீதிமன்றப் பதிவாளர் திணைக்களத்திற்குரிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டாலும், கௌரவ உயர் நீதிமன்ற நீதியரசர்களுக்குரிய பரப்பெல்லைக்கான குறிகாட்டிகளைத் தீர்மானிப்பது நடைமுறைச்சாத்தியமானதல்ல.
10	திட்டமிட்ட பயிற்சி வாய்ப்புக்களுள் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் 50 சதவீதத்தினை விட குறைவாக இருந்தது.	கௌரவ பிரதம நீதியரசரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நாளாந்த நீதிமன்ற நடடிவடிக்கைகளுக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. எதிர்காலத்திலும் இத்தகைய பயிற்சி வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
11	கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை.	கணக்காய்வுப் பரிந்துரைகள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன.
12	2020.08.28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12.1 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் தெளிவாகும் விதத்தில் அதன் முன்னேற்றத்தை அளவிடக்கூடிய 03 செயலாற்றுகைச் சுட்டிகள் இனங்காணப்படவில்லை.	பொருந்தாது.
13	அதிகபட்ச சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்த உத்தியோகத்தர்களை இடமாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.	பொருந்தாது.

பதிவாளர் - உயர்நீதிமன்றம்

Aravinda Gunaratne
Additional Magistrate
Registrar
Supreme Court
Colombo - 12
Sri Lanka

2024.02.05 ஆம் திகதி

உயர் நீதிமன்றத்தில்